TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109718

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 6 Date: நாள் 21.09.2022

2. (i) Act சட்டம்: prevention of corruption Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 12.09.2022 – 10.30 hrs
Date to : நாள் வரை 15.09.2022 – 19.50 hrs Over cell phone.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 20.09.2022 - 11.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் : 20.09.2022 – 17.00 hrs
FIR – 21.09.2022 – 09.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 21.09.2022 - 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் VAO அலுவலகம், பேரளம். 30 KM வடகிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. முகம்மது தமீம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. முகம்மது அனீஃப்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1988 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி NO. 8/51-4 காமதேனு நகர், கொல்லுமாங்குடி, நன்னிலம், திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. தேவதாஸ், கிராம நிர்வாக அலுவலர். பேரளம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

## பணிந்து அனுப்பப்படுகிறது:

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திரு. R.அருண்பிரசாத் ஆகிய நான் 20.09.2022ம் தேதி 17.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.S.முகம்மது தஜ்மில் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் S.முகம்மது தஜ்மில், த/பெ. S.முகம்மது சஹீத் 8/51-4, காயிதே மில்லத் தெரு, கொல்லுமாங்குடி, நன்னிலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 609403 பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் நன்னிலம் தாலுக்கா. கொல்லுமாங்குடியில் காயிதே மில்லத் தெருவில் நான் எனது அம்மா S.சஜிரத் பேகம் மற்றும் எனது தங்கையுடன் எனது பாட்டி வீட்டில் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறேன். நான் இளங்கலை கட்டிட கலை (B Arch) படித்துள்ளேன். கடந்த 17.03.2014 ந் தேதி எனது பாட்டி பாக்கத்து நிசாவிற்கு சொந்தமான பில்லூார் வருவாய் கிராமம், கொல்லுமாங்குடி உட்கிராமம் காயிதே மில்லத் தெருவில் சர்வே எண். 382/1G நஞ்சை மனை 600 சதுரமீட்டர் காலிமனை இடத்தினை எனது தாயார் S.சஜிரத் பேகத்திற்கு பேரளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 535/2014-ன்படி தான செட்டில்மெண்டு செய்து கொடுத்தார். மேற்படி இடத்தில் 18 குழியினை (254.08 சதுரமீட்டர்) எனது அம்மா S.சஜிரத் பேகம், குடவாசல் தாலுக்கா விஷ்ணுபுரம் வருவாய் கிராம், எரவாஞ்சேரி உசேன்நகரை சேர்ந்த ஜெகபர் சாதிக் மனைவி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

S.Md Tajmil 21/09/2022 (signature) — (signature) 21/9/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. Arun Prasad
Rank: நிலை Inspector No. எண் V&AC Thiruvarur.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

ரஹ்மத்து நிசா என்பவருக்கு கடந்த 12.10.2015ஆம் தேதி பேரளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 4677/2015-ன்படி கிரயம் செய்து கொடுத்தார். ஏற்கனவே விற்பனை செய்த இடம் போக மீதமுள்ள இடத்தினை உட்பிரிவு செய்து (Subdivision) எனது அம்மா பெயரில் பட்டா மாற்றம் செய்ய வேண்டி கடந்த 28.06.2022-ந் தேதி பூந்தோட்டம் இசேவை மையத்தில் ஆன்லைனில் எனது அம்மா பெயரில் அப்ளை செய்தேன். அதற்கு எனக்கு ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அதற்கான பட்டா மாறுதல் மனு எண். 2022/0105/20/077900 ஆகும். பின்னர் 14.08.2022-ந் தேதி இடத்தை அளவீடு செய்வதற்காக கொல்லுமாங்குடி கிராமத்திற்கு பொறுப்பு VAO திரு. தேவதாஸ் மற்றும் நன்னிலம் வட்ட சர்வேயர் திரு.அருண் ஆகியோர்கள் வந்து மேற்படி இடத்தை அளவீடு செய்தார்கள். மறுநாள் 15.08.2022-ந் தேதி மேற்படி VAO திரு. தேவதாஸ், சர்வேயர் திரு.அருண் மற்றும் மற்றொரு சர்வேயர் திரு.ராஜேந்திரன் ஆகியோர் வந்து மேற்படி இடத்தை அளவீடு செய்து நான்கு எல்லைகளையும் அடையாளம் காட்டினார்கள், அதில் நான் அவர்கள் முன்பாகவே கல்நட்டுக்கொண்டேன். VAO தேவதாஸ் அவர்கள் பட்டா என்னுடைய அம்மா பெயருக்கு மாறிவிடும் என்று சொல்லிவிட்டு சென்றார். பிறகு சில நாட்கள் கடந்தும் எனது அம்மா பெயருக்கு பட்டா மாறவில்லை என்பதை எனது ஒப்புகை ரசீது எண்ணை கொண்டு ஆன்லைனில் பார்த்தேன். அதில் The Application 2022/0105/20/077900 is pending with Village Administrative Officer from 28.06.2022 என வந்தது. எனவே மேற்படி பட்டா மாறுதல் குறித்து 12.09.2022-ந் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு பேரளம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நேரில் சென்று VAO திரு. தேவதாஸ் அவர்களை பட்டா மாறுதல் குறித்து கேட்டேன். அதற்கு VAO தேவதாஸ் என்னிடம் மேற்படி இடம் தொடர்பான ஆவண நகல்களை கேட்டார். நான் வைத்திருந்ததை கொடுத்தேன். அதை பார்த்துவிட்டு மேற்படி பட்டா மாறுதலுக்கு ரூ.10,000/- பணம் கேட்டார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். நீங்கள் இடத்தைதான் அளந்து கொடுத்துவிட்டீர்களே, அதிலிருந்து பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்க வேண்டியதுதானே என்று கேட்டேன். அதற்கு VAO நீங்கள் ஆன்லைனில் பணம் செலுத்தி அப்ளை செய்ததற்கு இடத்தை அளந்து கொடுத்துவிட்டோம். பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ. 10,000/- பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். மேலும் எனது அம்மா, ரஹமத்து நிசா என்பவரிடம் விற்பனை செய்த இடத்தின் ஆவண நகல் இருந்தால் எடுத்துவர சொன்னார். தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் பணத்தை ரெடி செய்து கொண்டு ஆவணத்துடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் கடந்த 15.09.2022-ந் தேதி இரவு சுமார் 7.50 மணிக்கு எனது செல்போன் எண் 9363433357 என்ற எண்ணிற்கு, VAO தேவதாஸ் அவர்களின் செல்போன் எண் 9361547289 என்ற எண்ணிலிருந்து அழைத்திருந்தார். நான் அதை கவனிக்காததால் உடனே மீண்டும் எனது செல்போனிலிருந்து VAO தேவதாஸ் அவர்களுக்கு போன்செய்தேன். அப்போது VAO தேவதாஸ் அவர்கள் என்னிடம் பட்டா மாறுதலுக்கு பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் தற்போது பணம் நெருக்கடியாக உள்ளது, பணம் ரெடி செய்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். மேற்படி VAO தேவதாஸ் கேட்கும் ரூ.10,000/- லஞ்ச பணத்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால் 20.09.2022-ந் தேதி காலை 09.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவகம் வந்து தகவல் சொன்னேன். நான் சொன்ன தகவலின் பேரில் VAO தேவதாஸ் லஞ்ச பணம்

கேட்பதை உறுதி செய்வதற்காக என்னுடன் ஒரு காவலரை அனுப்பி VAO தேவதாசை சந்தித்து பட்டா மாறுதல் குறித்து கேட்குமாறும் அதுதொடர்பான உரையாடலை ஆடியோ பதிவு செய்வதற்கு Voice Recorder கொடுத்து சுமார் 10.00 மணிக்கு அனுப்பி வைத்தார்கள். நான் திருவாரூரிலிருந்து புறப்பட்டு பேரளம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சுமார் 11.00 மணியளவில் சென்று VAO தேவதாசை சந்தித்து பட்டா மாறுதல் தொடர்பாக அவர் கேட்டிருந்த ஆவணத்தை கொடுத்துவிட்டு பட்டா மாறுதல் குறித்து கேட்டேன். அதற்கு அவர் ரூ.10,000/- லஞ்ச பணம் கொடுத்தால் மட்டுமே பட்டா மாறுதல் செய்து தருவேன் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும், எனது குடும்ப சூழ்நிலையை எடுத்து கூறி பணத்தை குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினேன். சரி ரூ.8,000/- எடுத்து வா என்று VAO தேவதாஸ் கூறினார். நான் சரி என்று சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டேன். அந்த உரையாடல் பதிவுடன் மதியம் சுமார் 2.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவகம் வந்து துணை காவல் கண்காணிப்பாளரிடம் Voice Recorder கொடுத்தேன். துணை காவல் கண்காணிப்பாளர் அந்த உரையாடலை கேட்டுவிட்டு பட்டா மாறுதலுக்காக VAO தேவதாஸ் லஞ்சமாக ரூ.8,000/- கேட்பதை உறுதிசெய்து கொண்டார்கள். VAO தேவதாஸ் கேட்ட லஞ்சபணம் ரூ.8000/- கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. அதனால் இன்று 20.09.2022-ந் தேதி மாலை 5.00 மணிக்கு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். VAO தேவதாஸ் கையூட்டாக கேட்ட பணம் ரூ.8,000/-த்தை எடுத்து வந்துள்ளேன். மேற்படி VAO தேவதாஸ் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் தானசெட்டில்மெண்ட் பத்திரம், கிரய பத்திர நகல், ஒப்புகை சிட்டா நகல், பட்டா நகல், வில்லங்க சான்று மற்றும் Pending Status Report நகல் ஆகியவற்றை புகாருடன் இணைத்துள்ளேன். Sd xxxxxx (S. முகம்மது தஜ்மில் 20.09.2022) Sir, Received and perused the complaint., In this connection, Tr.R.Arunprasad, Inspr. of Police, V&AC, TVR is instructed to verify the content of this complaint and reputation of the suspect officer and proceed as per law Sd xxxxxx (B.V.Nandagopal, DSP, V&AC, TVR) 20/9/22 ஐயா மேற்படி புகாரை பெற்று எதிரி மீது முன் விசாரணை செய்து, இம்மனு மீது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 6/2022 U/s 7 of P.C Act 1988 as amended 2018 படி 21.9.2022ஆம் தேதி காலை 09.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. Sd xxxxxx (R.Arunprasad) V&AC, Thiruvarur 21.9.2022.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகள் மற்றும் 20.09.2022-ந் தேதி வாதிக்கும், VAO தேவதாசுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் பதிவு உள்ள குறுந்தகடு ஆகியவற்றை கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.